# ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் இல்லை

## உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு



ஒரே பாலின திருமணம் தொடர்பான தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் உள்ளிட்ட 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு.

**புது தில்லி, அக். 17:** ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் அளிக்க மறுப்பு தெரிவித்து 5 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு ஒருமனதாக செவ்வாய்க்கிழமை (அக்.17) தீர்ப்பு வழங்கியது.

இதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவது குறித்து முடிவு எடுப்பது நாடாளுமன்றத்திடம் தான் உள்ளது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

எனினும், ஒரே பாலின ஈர்ப்பாளர்களுக்கு சம உரிமை அளித்து, சமுதாயத்தில் உள்ள பாகுபாடுகளைக் களைய வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

**திருமண அங்கீகாரம்:** ஓரினச் சேர்க்கை குற்றமற்றது என கடந்த 2018-இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, 'ஒரே பாலினத்தவர்களின் திருமணங்களை சிறப்புத் திருமணச் சட்டப்படி அங்கீகரிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், 'திருமண அங்கீகாரம் கிடைக்காததால் குழந்தைகளைத் தத்தெடுக்கவும், ரேஷன் அட்டை வாங்கவும், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், பள்ளிகளில் குழந்தைகளுக்குப் பெற்றோராகப் பதிவு செய்யவும், காப்பீடு பெறவும், சொந்தமாக வீடுகளை வாங்கவும் ஒரே பாலினத்தவர்களால் முடியவில்லை. பாலினத்தைக் காரணம்காட்டி சமூகத்தில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்க வேண்டும்' என்றும் கோரப்பட்டிருந்தது.

**சட்ட அங்கீகாரம் கிடையாது:** இந்த மனுக்கள் மீதான விசாரணையை 10 நாள்கள் நடத்திய உச்சநீதிமன்றம் கடந்த மே 11-ஆம் தேதி தீர்ப்பை ஒத்திவைத்தது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் எஸ்.கே.கௌல், எஸ். ரவீந்திர பட், ஹிமா கோலி, பி.எஸ். நரசிம்மா ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு செவ்வாய்க்கிழமை தீர்ப்பை வழங்கியது.

அதில், பெண் நீதிபதி ஹிமா கோலியைத் தவிர நான்கு நீதிபதிகளும் தனித் தனியாக தீர்ப்பை எழுதியிருந்தனர்.

**நீதிபதிகள் அளித்த ஒருமித்த தீர்ப்பின் விவரம்:** அரசியல் சாசன சட்டத்தின்படி, ஒரே பாலினத்தவர்கள் திருமணத்தை உரிமையாகக் கோர முடியாது. இதற்காக சிறப்புத் திருமண சட்டத்தைத் திருத்த வேண்டியதில்லை. இது தொடர்பான சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் உள்ளது.

ஒரே பாலின ஈர்ப்பாளர்கள் தங்களுக்குப் பிடித்த துணையைத் தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால், சேர்ந்து வாழ்வதற்கு சட்ட அங்கீகாரம் கோர முடியாது.

மூன்றாம் பாலினத்தவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம்.

ஒரே பாலின ஈர்ப்பாளர்களுக்கு ரேஷன் கார்டுகள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் கிடைக்க மத்திய அமைச்சரவைச் செயலர் தலைமையில் குழு அமைத்து பரிசீலிக்கப்படும் என்று மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்த யோசனை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சமூகப் பாதுகாப்பு குறித்த அவர்களின் அனைத்துக் கோரிக்கைகள் குறித்து நாடாளுமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பு அளித்தனர்.

**மக்களிடம் விழிப்புணர்வு:** தனது தரப்பு தீர்ப்பை வாசித்த தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், 'நீதிமன்றத்தால் சட்டம் இயற்ற முடியாது. இதற்கான அர்த்தத்தைக் கற்பித்து, சட்டத்தின் தாக்கத்தை அதிகரிக்க மட்டுமே முடியும். சிறப்புத் திருமணச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டுமா என்பதை நாடாளுமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும்.

ஒரே பாலின ஈர்ப்பாளர்கள் மீது சமூகத்தில் பாகுபாடு இல்லாமல் இருப்பதை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். அவர்களின் உரிமை குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

அவர்களின் உறவு முறை குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்யும் முன்பு முதல்கட்ட விசாரணையை நடத்த வேண்டும்.

திருமண பந்தம் என்பது நிலையானது அல்ல; மாறுதலுக்கு உட்பட்டது. ஆகையால், ஒரே பாலினத்தவர்கள் தனது வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்து கொள்ள அவர்களுக்கு உரிமை உள்ளது. இந்த முறை நகர்ப்புறங்கள், மேல்தட்டு மக்களிடம் மட்டும் உள்ளது என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இடைபாலின மாற்றுக் குழந்தைகளுக்கு அவர்கள் உடல் தகுதி அடையும் வரையில் கட்டாயமாக பாலின மாற்று சிகிச்சை செய்யக் கூடாது' என்றார்.

**மாறுபட்ட தீர்ப்பு:** ஒரே பாலினத்தவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற தலைமை நீதிபதியின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்த நீதிபதி எஸ்.கே. கௌல், 'ஒரே பாலினத்தவர்கள் தங்கள் துணையைத் தேர்வு செய்து கொண்டு சேர்ந்து வாழ சட்டபூர்வ அங்கீகாரம் அளிப்பது திருமணத்துக்கு ஈடான அடுத்தகட்ட நகர்வாகும்' என்றார்.

நீதிபதி எஸ். ரவீந்திர பட், 'ஒரே பாலினத்தவர்கள் எந்தவித இடையூறுமில்லாமல் சேர்ந்து வாழ உரிமை உள்ளது' என்று தீர்ப்பில் குறிப்பிட்டார்.

'ஒரே பாலினத்தவர்களுக்கு திருமணம் செய்து கொள்ள அடிப்படை உரிமை இல்லை' என்று நீதிபதி நரசிம்மா தீர்ப்பில் குறிப்பிட்டார்.

## 'குழந்தைகளைத் தத்தெடுக்க முடியாது'

ஒரே பாலின தம்பதி குழந்தைகளைத் தத்தெடுக்க முடியாது என்று 5 நீதிபதிகளில் 3 நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

ஆனால், அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதி எஸ்.கே. கௌல் ஆகியோர் இதற்கு எதிராக தீர்ப்பை வழங்கினர்.

திருமணமாகாதவர்கள், ஒரே பாலினத்தவர்கள் ஆகியோர் குழந்தை தத்தெடுப்பதைத் தடுப்பது சட்டவிரோதம், பாகுபாடாகும் என்றும், இது மத்திய தத்தெடுப்பு ஆணையத்தின் விதிமுறைக்கு எதிரானது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

திருமணமான மாற்று பாலின தம்பதிகளால் மட்டுமே குழந்தைகளுக்கு சிறந்த பெற்றோராக இருக்க முடியும் என்பதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை. இரண்டு ஆண்டுகள் தம்பதிகள் சேர்ந்து வாழ்ந்திருந்தால் தான் குழந்தையைத் தத்தெடுக்க முடியும் என்ற விதிமுறை உள்ளதால், ஒரே பாலினத்தவர் தனி நபராகத்தான் குழந்தையைத் தத்தெடுக்க முடியும். இது ஒரே பாலினத்தவர்களுக்கு காட்டப்படும் பாகுபாடாகும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முக்கிய அம்சங்கள்...

- சிறப்புத் திருமணச் சட்டத்தை திருத்துவது குறித்து நாடாளுமன்றம் தான் முடிவெடுக்க முடியும்.
- வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கலாம்.
- சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் அளிக்க வேண்டும்.
- சமூகப் பாகுபாடுகளைக் களைய வேண்டும்.
- திருமணம் அடிப்படை உரிமை கிடையாது.

## ஆர்எஸ்எஸ், காங்கிரஸ் கருத்து

'ஒரே பாலின திருமணம் தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு வரவேற்கத்தக்கது. நமது ஜனநாயக நாடாளுமன்ற அமைப்பு, இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்னைகள் குறித்து தீவிரமாக விவாதித்து, உரிய முடிவை எடுக்க வேண்டும்'

*– சுனில் அம்பேகர், அகில பாரத பிரசார் பிரமுக், ஆர்எஸ்எஸ்.*

'ஒரே பாலின திருமணம் தொடர்பாக உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை வழங்கிய மாறுபட்ட தீர்ப்புகளை ஆராய்ந்து விரிவான பதிலைத் தெரிவிப்போம். மக்களின் சுதந்திரங்கள், விருப்பங்கள், உரிமைகளைப் பாதுகாப்பதில் காங்கிரஸ் எப்போதும் துணை நின்றுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய எங்களுடைய கட்சி, நீதித் துறை, சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் பாகுபாடற்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது'

*– ஜெய்ராம் ரமேஷ், காங்கிரஸ் பொதுச் செயலர்.*

EVA STALIN

# 2035–க்குள் விண்வெளியில் இந்திய ஆய்வு நிலையம்

## இஸ்ரோவுக்கு பிரதமர் அறிவுறுத்தல்



**புது தில்லி, அக். 17:** வரும் 2035–ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்தியாவின் ஆய்வு நிலையத்தை அமைப்பது, 2040–ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு இந்திய விண்வெளி வீரரை அனுப்புவது ஆகியவற்றை லட்சிய இலக்குகளாகக் கொள்ள வேண்டும் என்று இஸ்ரோவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தினார்.

மனிதர்களை விண்கலம் மூலம் பூமியின் சுற்றுவட்டப் பாதையின் 400 கி.மீ. தொலைவுக்கு அனுப்பி, பின்னர் பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டுவரும் ககன்யான் திட்டம் குறித்து பிரதமர் தலைமையில் தில்லியில் உயர்நிலை ஆய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்போது, ககன்யான் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து பிரதமரிடம் இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் விளக்கினார்.

**2025–இல் ககன்யான்:** இக்கூட்டத்துக்கு பிறகு பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டது. அதில், ககன்யான் விண்கலம் 2025–ஆம் ஆண்டில் செலுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024–ஆம் ஆண்டின் இரண்டாவது பாதியில் ககன்யான் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 2025–ஆம் ஆண்டில்தான் அது நிகழும் என்பது தற்போதைய கூட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

**லட்சிய இலக்குகள்:** கூட்டத்தின்போது, இஸ்ரோவுக்கு பிரதமர் சில அறிவுறுத்தல்களை வழங்கினார். '2035–ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்திய ஆய்வு நிலையத்தையும், 2040–க்குள் நிலவுக்கு இந்திய விண்வெளி வீரரை அனுப்புவதையும் இலக்குகளாக கொள்ள வேண்டும். வெள்ளி சுற்றுப்பாதை திட்டம், செவ்வாயில் தரையிறங்கும் திட்டம், நிலவை விரிவாக ஆராயும் திட்டங்களில் விஞ்ஞானிகள் கவனம் செலுத்த வேண்டும்' என்று பிரதமர் மோடி அறிவுறுத்தியதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# சமூகநீதியும் சாதிவாரி கணக்கெடுப்பும்!



பெ.சிதம்பரநாதன்

**சாதிய கணக்கெடுப்பு அனைத்து சாதிகளையும் சமப்படுத்துவதற்கானதாக இருக்க முடியாது. பெரிய சாதிகளின் ஆதிக்கம், சிறிய சாதிகளின் மேல் ஏற்படும். அப்போது சிறுபான்மை சாதிகளின் குரல் ஒடுங்கிவிடும். இதனால், இக்கணக்கெடுப்பு சமூகக் கட்டமைப்பையே கலைத்துப் போட்டுவிடும் நிலைமை ஏற்படலாம்.**

கட்டுரையாளர்:
எழுத்தாளர்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இது வளர்ச்சியல்ல!

இந்திய பொருளாதாரம் எதிர்கொள்ளும் இரண்டு மிகப் பெரிய சவால்களாக விலைவாசி உயர்வும், வேலையில்லாத் திண்டாட்டமும் சுட்டிக்காட்டப்படுகின்றன. உலகளாவிய நிலையில் வல்லரசு நாடுகளான அமெரிக்கா, சீனா போன்ற பெரிய பொருளாதாரங்களே தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில், இந்திய பொருளாதாரம் விலைவாசி உயர்வையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் எதிர்கொள்வதில் வியப்பொன்றுமில்லை.

ரஷிய - உக்ரைன் போரும் அதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் கச்சா எண்ணெய் விலை உயர்வு, உணவு தானியப் பொருள்களின் தட்டுப்பாடு ஆகியவை பெரும்பாலான நாடுகளில் பொருளாதார மந்தநிலையையும், உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியிருப்பது உண்மை. இப்போது மேற்கு ஆசியாவில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழல், நிலைமையை மேலும் சீர்குலைக்கக் கூடும்.

கடல்வழிப் போக்குவரத்தும் பாதிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. சர்வதேச வர்த்தகம் சூயஸ் கால்வாய் வழியாக நடைபெற முடியாமல் போகும்போது, கப்பல் போக்குவரத்து தென்னாப்பிரிக்கா வழியாக நடைபெற வேண்டிய கட்டாயம் உருவாகும். அதனால் சரக்குப் பரிமாற்ற காலதாமதமும், சரக்குக் கட்டண உயர்வும் தவிர்க்க முடியாதவையாக மாறக்கூடும்.

இவை இந்தியாவின் ஏற்றுமதியை பாதிக்கும்போது, அதன் தொடர்விளைவாக உள்நாட்டு உற்பத்தி குறையும். உற்பத்தித் துறையில் ஏற்படும் தளர்வின் விளைவால் வேலைவாய்ப்புகள் மேலும் குறையும் அபாயத்தை நாம் எதிர்கொண்டாக வேண்டும்.

இத்தனை பிரச்னைகளுக்கு நடுவிலும், இந்திய பொருளாதாரம் 6.3% வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது மிகப் பெரிய ஆச்சரியம். தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் (நேஷனல் சாம்பிள் சர்வே ஆஃபீஸ்) வெளியிட்டிருக்கும் வழக்கமான தொழிலாளர்கள் தொடர்பான ஆய்வறிக்கை, சில நம்பிக்கையூட்டும் ஆச்சரியமான தகவல்களைத் தெரிவிக்கிறது. நாடு தழுவிய அளவில் தொழிலாளர்களின் எண்ணிக்கையும், வேலைவாய்ப்பு குறித்த தகவலும் அந்த அறிக்கையில் காணப்படுகிறது. வேலைவாய்ப்பின்மை குறித்த பரவலான குற்றச்சாட்டுகளை அந்த அறிக்கையின் விவரங்கள் மறுதலிக்கின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலைவாய்ப்பின்மை 3.2% என்கிற அளவுக்குக் குறைந்திருக்கிறது. 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருப்பது அதிகரித்திருக்கிறது. 2017 - 18 -இல் 49.8%-ஆக இருந்த வேலை பார்ப்போர் எண்ணிக்கை 2022 -23- இல் 57.9%-ஆக அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கிறது அந்த ஆய்வு.

மக்கள்தொகைக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான விகிதமும் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது என்பது தெரிகிறது. நகர்ப்புறங்களில் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை 2017 - 18 -இல் 47.5% என்றால், அது 2022 - 23 -இல் 48.8%-ஆக உயர்ந்திருக்கிறது. பணிகளில் ஈடுபடும் ஆண்களின் எண்ணிக்கை 73.5%. பெண்களின் எண்ணிக்கை 20.9%-லிருந்து 23.2%-ஆக அதிகரித்திருக்கிறது. அதிக அளவில் பல்வேறு வேலைகளில் மகளிர் ஈடுபடுவது அதிகரித்து வருவதை இந்தத் தரவு வெளிப்படுத்துகிறது.

வேலைவாய்ப்பின்மை குறைந்திருப்பது வளர்ச்சியின் அறிகுறி என்பதை மறுப்பதற்கில்லை. முறையான மாத வருவாய் வழங்கும் வேலைவாய்ப்புகள் குறைந்து, சுய வேலைவாய்ப்பு அதிகரித்திருப்பதையும் ஆய்வு தெரிவிக்கிறது. வேலைவாய்ப்பின் தரம், தொடர் வேலைவாய்ப்புக்கான உறுதி, வேலைக்கேற்ற ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் இருந்தால் மட்டும்தான் அதனை ஆரோக்கியமான முன்னேற்றமாக நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியும்.

வேளாண்மை அல்லாத துறைகளில் காணப்படும் முறைசாரா வேலைவாய்ப்புகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. 2020 - 21 - இல் 71.4%-ஆக இருந்த முறைசாரா வேலைவாய்ப்புகள், 2022 - 23- இல் 74.3%-ஆக அதிகரித்திருக்கின்றன. இவை பெரும்பாலும் தற்காலிக வேலைவாய்ப்புகள். இவற்றில் தொடர்ந்த வேலைவாய்ப்பு உறுதியும், பாதுகாப்பும் இல்லை என்பதுடன் ஊதியமும் குறைவு. படித்து முடித்து, வேலைவாய்ப்பு கிடைக்காத இளைஞர்கள், தற்காலிக வேலைவாய்ப்பை நாடுகிறார்கள். அதனால் இதற்காக மகிழ்ச்சி அடைய முடியாது.

சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் 55.6%-லிருந்து 57.3%-ஆக அதிகரித்திருப்பதாகவும், நிரந்தரப் பணிகளில் மாத ஊதியம் பெறுவோரின் எண்ணிக்கை 21.1%-லிருந்து 20.9%-ஆகக் குறைந்திருப்பதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களில் இருந்து இந்திய பொருளாதாரம் ஆக்கபூர்வமான, அதிக ஊதியம் வழங்கும் வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை என்பது புலப்படுகிறது.

இந்தியாவில் தொழிலாளர்கள் எண்ணிக்கை கிராமப்புறங்களை விட நகர்ப்புறங்களில் அதிகரித்து வருகிறது. கிராமப்புற வேலைவாய்ப்பில் பெண்களின் எண்ணிக்கை 2017 - 18 -இல் 24.6%-ஆக இருந்தது, 2022 - 23 -இல் சுமார் 17% அதிகரித்து 41.5%-ஆக உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம், குடும்ப வருமானத்தை அதிகரிக்க, கிராமங்களில் பெண்கள் வேலைக்குப் போவது அவசியமாகிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

வேலைவாய்ப்புக்கான எண்ணிக்கை அதிகரித்திருப்பது உண்மைதான் என்றாலும், என்ன மாதிரியான வேலைவாய்ப்புகள் உருவாகியிருக்கின்றன என்பது குறித்த ஆய்வு அவசியம். வேலைவாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கையைப் போலவே, தரமான வேலைவாய்ப்புகள் உருவானால்தான் அதை முறையான வளர்ச்சியாக நாம் கணக்கில் கொள்ள முடியும்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## பிரதமரின் விஸ்வகர்மா திட்டம்: 7 மாவட்டங்களில் 9,246 பேர் பதிவு

**சென்னை, அக்.17:** பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தில் தமிழகத்தின் 7 மாவட்டங்களில் இதுவரை 9,246 பயனாளிகள் பொது சேவை மையம் மூலம் பதிவு செய்துள்ளனர்.

விஸ்வகர்மா திட்டம் பிரதமர் மோடியால் கடந்த செப்.17 ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. 18 வகையான பாரம்பரிய கைவினைக்கலைஞர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், ரூ. 13 ஆயிரம் கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், திறன் மேம்பாட்டு அமைச்சகம், நிதி அமைச்சகத்தின் நிதி சேவைகள் துறை ஆகியவை இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற திங்கள் கிழமை வரை 9,246 பயனாளிகள் பதிவு செய்துள்ளனர்.

அதன்படி கோவை மாவட்டத்தில் 3,676 பேரும், ஈரோடு மாவட்டத்தில் 1,025 பேரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,506 பேரும், ராமநாதபுரம் மாவட்டத்தில் 896 பேரும் பதிவு செய்துள்ளனர்.

இதேபோல், நீலகிரி மாவட்டத்தில் 187 பேரும், திருப்பூர் மாவட்டத்தில் 895பேரும், விருதுநகர் மாவட்டத்தில் 1,061 பேரும் பதிவு செய்துள்ளனர். இத்திட்டத்தில் பதிவு செய்துள்ள பயனாளிகளின் விண்ணப்பங்கள் மூன்றடுக்கு முறையில் சரிபார்க்கப்பட்டு அதன் பின்னர் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். அதன்பிறகு அந்தப்பட்டியல் வங்கிகளுக்கு அனுப்பப்படும். பின்னர் பயனாளிகளுக்கு தொழில் சார்ந்த உதவிகள் வழங்கப்படும்.

EVA STALIN IAS ACADEMY

# உலகின் புதிய நம்பிக்கை இந்தியா: பிரதமர் மோடி

**மும்பை, அக். 17:** 'ஒட்டுமொத்த உலகமும் புதிய நம்பிக்கையுடன் இந்தியாவை நோக்குகிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மேலும், 'இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம், உலக கடல்சார் வர்த்தகத்தை மாற்றியமைக்கும் ஆற்றல் கொண்டது' என்று குறிப்பிட்ட அவர், இந்தியாவின் இந்த முயற்சியில் பங்கேற்குமாறு உலக முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மூன்றாவது உலக கடல்சார் இந்திய உச்சிமாநாடு, மும்பையில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. மூன்று நாள்கள் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டை காணொலி மூலம் தொடங்கிவைத்து பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவின் கடல்சார் திறன்கள், உலகுக்கு எப்போதும் நன்மை பயக்கும் என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. தில்லியில் அண்மையில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டில் இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தட திட்டத்துக்கான கருத்தொற்றுமை எட்டப்பட்டது. இது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

சில நூற்றாண்டுகளுக்கு முந்தைய பட்டுப்பாதை வழித்தடத்தைப் போல், இதுவும் செழுமைக்கான ஊக்கியாக அமையும்.

உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தை மாற்றியமைக்கும் ஆற்றல்கொண்ட இந்த வழித்தடம், அடுத்த தலைமுறை வசதிகளுடன் மாபெரும் துறைமுகங்கள், விரிவான பன்முக மையங்கள் கட்டமைப்பு, தீவுகள் மேம்பாடு உள்ளிட்ட பணிகளை உள்ளடக்கியதாகும். இது வர்த்தக செலவு, சுற்றுச்சூழல் சேதங்களைக் குறைப்பதோடு, சரக்கு கையாளுகை செயல்திறனை மேம்படுத்தும். ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.



மும்பையில் உலக கடல்சார் இந்திய உச்சி மாநாட்டை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்த பிரதமர் மோடி.

உலக-பிராந்திய வர்த்தகத்தில் நேர்மறையான மாற்றங்களுக்கு வழிவகுக்கும் இந்த வழித்தட முன்னெடுப்பில், இந்தியாவுடன் இணைந்து பங்கேற்க உலக முதலீட்டாளர்களுக்கு சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**இந்தியாவை நோக்கும் உலகம்:** கரோனா பெருந்தொற்று காலகட்டத்துக்குப் பிறகு உலகின் ஒழுங்குமுறை மாற்றம் கண்டுள்ளது. ஒட்டுமொத்த உலகமும் புதிய நம்பிக்கையுடன் இந்தியாவை நோக்குகிறது.

உலக அளவில் மூன்றாவது இடத்தை எட்டும் வகையில், இந்தியாவின் உள்நாட்டுப் பொருளாதாரம் தொடர்ந்து வலுவாகி வருகிறது.

வளர்ச்சி, மக்கள்தொகை, ஜனநாயகம், சந்தைத் தேவை ஆகிய முக்கிய அம்சங்களுடன் ஆசிர்வதிக்கப்பட்ட வெகுசில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகத் திகழ்கிறது. அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ந்த நாடாக விரும்பும் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் உலக முதலீட்டாளர்கள் இணைய வேண்டும்.

**நாட்டின் வளர்ச்சியில் துறைமுகங்கள்:** 'இந்தியாவில் தயாரிப்போம்; உலகுக்காக உருவாக்குவோம்' என்பதே எனது அரசின் கொள்கை. அந்த அடிப்படையில், ஒவ்வொரு துறையிலும் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த 9-10 ஆண்டுகளில் நாட்டின் கடல்சார் துறையை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'நாட்டின் வளர்ச்சி மற்றும் வளமையில் துறைமுகங்கள்' என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கடல்சார் துறையில் அடிப்படையில் நிலையிலேயே மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

**கையாளும் திறன் இரட்டிப்பு:** கடந்த தசாப்தத்தில், நாட்டின் முக்கியத் துறைமுகங்களின் கையாளும் திறன் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. சரக்குப் பெட்டகங்களின் காத்திருப்பு நேரம், கடந்த 2014-ஆம் ஆண்டில் 42 மணி நேரமாக இருந்தது. இப்போது அது 24 மணி நேரமாக குறைந்துள்ளது.

துறைமுகங்களுக்கான இணைப்பை வலுப்படுத்த ஆயிரக்கணக்கான கி.மீ. தொலைவுக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் பல இடங்களில் கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்ப்பு மையங்கள் அமைக்கப்படும்.

'பசுமையான பூமியை உருவாக்குவதற்கான ஊடகம் நீலப் பொருளாதாரம்' என்ற எதிர்காலத்தை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

**உலக கப்பல் சுற்றுலா மையமாக...:** இந்தியாவின் நீண்ட கடற்கரை, வலுவான நதி சுற்றுச்சூழல் அமைப்பு, வளமிக்க கலாசார பாரம்பரியம் ஆகியவை, கடல்சார் சுற்றுலாவுக்கு பெரும் வாய்ப்பை உருவாக்குகின்றன.

அதிநவீன உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளால், உலக கப்பல் சுற்றுலா மையமாக உருவெடுப்பதை நோக்கி இந்தியா பயணிக்கிறது.

சென்னை, விசாகப்பட்டினத்தில் உள்ளதைப்போன்று, மும்பையில் கப்பல் சுற்றுலா முனையம் கட்டப்பட்டு வருகிறது. கப்பல் சார் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில், உலகின் மிக நீண்ட நதிச் சுற்றுலா கப்பல் சேவையை இந்தியா தொடங்கியது என்றார் பிரதமர் மோடி.

இந்தியாவின் கடல்சார் துறைக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கான முக்கியத் தளமாக விளங்கும் இந்த மாநாட்டில், 70 நாடுகளில் இருந்து அமைச்சர்கள், தொழில் துறை தலைவர்கள், பல்வேறு நிறுவனங்களின் உயரதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

மாநாட்டில், எதிர்காலத்துக்கு ஏற்ற துறைமுகங்கள், கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல் உள்பட கடல்சார்ந்த பல்வேறு விவகாரங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

## ரூ.23,000 கோடி திட்டங்கள் தொடக்கம்

உலக கடல்சார் இந்திய மாநாட்டில், நாட்டின் கடல்சார் நீலப் பொருளாதாரத்துக்கான நீண்டகால செயல்திட்டத்தை பிரதமர் மோடி வெளியிட்டார்.

'அமிர்த காலப் பார்வை-2047' எனும் அந்தச் செயல்திட்டத்துக்கு இணங்க, ரூ.23,000 கோடி மதிப்பீட்டில் பணி முடிந்த திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

குஜராத்தின் தீனதயாள் துறைமுகத்தில் ரூ.4,500 கோடி மதிப்பில் அனைத்துப் பருவநிலைகளுக்கும் உகந்த ஆழமான புதிய முனையம் அமைக்கும் திட்டத்துக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

அத்துடன், கடல்சார் துறையில் ரூ.7.16 லட்சம் கோடி மதிப்பில் சர்வதேச மற்றும் தேசிய ஒத்துழைப்புக்கான 300 புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் நாட்டுக்கு பிரதமர் அர்ப்பணித்தார்.

# நடிகை வஹீதா ரஹ்மானுக்கு தாதா சாகேப் பால்கே விருது

**குடியரசுத் தலைவர் வழங்கினார்**

**புது தில்லி, அக்.17:** இந்திய திரைத் துறையின் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே' விருதை பழம்பெரும் நடிகை வஹீதா ரஹ்மானுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

இந்திய திரைப்படத் துறையில் வஹீதா ரஹ்மானின் பங்களிப்பைப் பாராட்டி, அவருக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது கடந்த மாதம் 26-ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.

**8-ஆவது பெண்:** தில்லியில் நடைபெற்ற 69-ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் அவருக்கு தாதா சாகேப் விருதை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கி கௌரவித்தார். இவர், தாதா சாகேப் பால்கே விருதைப் பெறும் 8-ஆவது பெண் ஆவார்.

தெலுங்கு படமான 'ரோஜுலு மாராயி' மூலம் கடந்த 1955-ஆம் ஆண்டு திரையுலகுக்கு அறிமுகமான வஹீதா ரஹ்மான் (85), 'பியாசா', 'சிஐடி', 'கைடு', 'காகஸ் கே ஃபூல்', 'காமோஷி', 'திரிசூல்' உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர்.

60 ஆண்டுகளுக்கும் மேலாக 90-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள வஹீதா சிறந்த நடிகைக்கான தேசிய விருதை இரு முறையும், பிலிம்ஃபேர் உள்பட பல்வேறு திரைப்பட விருதுகளையும் பெற்றவர். மேலும், இவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷண் விருதுகளை வழங்கி மத்திய அரசு கௌரவித்தது. சென்னை அருகே செங்கல்பட்டில் பிறந்தவரான நடிகை வஹீதா ரஹ்மான், தற்போது பெங்களூரில் வசித்து வருகிறார்.

**தடைகளைத் தகர்த்தெறிந்த பெண்:** வஹீதா ரஹ்மானைப் பாராட்டி குடியரசுத் தலைவர் முர்மு பேசுகையில், 'தன்னுடைய கலை மற்றும் ஆளுமைத் திறமையால், திரைத் துறையில் உச்சம் கண்டவர் வஹீதா. தன்னம்பிக்கை, மரியாதைக்கு அடையாளமாக தன்னை அவர் நிலைநிறுத்திக் கொண்டார். பெரும்பாலான திரைப்படங்களில் தடைகளை உடைத்தெறியும் கதாபாத்திரங்களில் அவர் நடித்தார். பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விஷயத்தில் பெண்களே முன்னெடுப்பைத் தொடங்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக நடிகை வஹீதா விளங்குகிறார்' என்றார்.

**திரைத் துறையுடன் விருதைப் பகிர்கிறேன்:** விருதைப் பெற்றுக் கொண்டு நடிகை வஹீதா ரஹ்மான், 'விருது பெற்றதை பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன்.

அனைத்து மூத்த தொழில்நுட்பக் கலைஞர்களுடன் நான் பணியாற்றியுள்ளேன். திரையுலகின் அனைத்துத் துறையினருடன் இந்த விருதைப் பகிர்ந்து கொள்கிறேன்' என்றார்.

**மற்ற வெற்றியாளர்கள்:** சிறந்த நடிகருக்கான தேசிய விருதை 'புஷ்பா-1' திரைப்படத்தில் நடித்த நடிகர் அல்லு அர்ஜுன் பெற்றுக் கொண்டார்.

சிறந்த நடிகைக்கான தேசிய விருதை மிமி திரைப்படத்தில் நடித்த நடிகை க்ருதி சேனன், கங்குபாய் காடியாவாடி திரைப்படத்தில் நடித்த நடிகை ஆலியா பட் ஆகிய இருவரும் பெற்றனர்.

சிறந்த திரைப்படத்துக்காக 'ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட்' படத்துக்கு வழங்கப்பட்ட தேசிய விருதை நடிகர் - இயக்குநர் மாதவன் பெற்றார்.

சிறந்த பொழுதுபோக்குத் திரைப்படத்துக்காக 'ஆர்.ஆர்.ஆர்' படத்துக்கு வழங்கப்பட்ட தேசிய விருதை இயக்குநர் ராஜமௌலி பெற்றுக் கொண்டார்.

**தமிழகத்தில் இருந்து...:** சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்காக 'கடைசி விவசாயி' படத்துக்கு வழங்கப்பட்ட தேசிய விருதை இயக்குநர் மணிகண்டன் பெற்றுக் கொண்டார்.

'கருவறை' குறும்படத்துக்கு இசையமைத்ததற்கு வழங்கப்பட்ட சிறப்பு தேசிய விருதை இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா பெற்றுக் கொண்டார்.



1. தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் நடிகை வஹீதா ரஹ்மானுக்கு தாதா சாகேப் பால்கே விருதை வழங்கிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு. உடன் மத்திய அமைச்சர்கள் அனுராக் தாக்குர், எல்.முருகன்.
2. சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றுக்கொண்ட நடிகர் அல்லு அர்ஜுன்.
3. சிறந்த திரைப்படத்துக்காக 'ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட்' படத்துக்கு வழங்கப்பட்ட தேசிய விருதை பெற்றுக்கொண்ட நடிகர்- இயக்குநர் மாதவன்.